
සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல. 1

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **முன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியிட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1)




(2)




(3)


2. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?












(1) மின்விசிறியும் மேசையும் (2) சைக்கிளும் மணிக்கூடும் (3) கதிரையும் மேசையும்

3. பின்வரும் உருக்களில் காட்டப்படும் பழங்களை அவற்றுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறை யாது?



A



B



C



D

(1) A, B உம் C, D உம் (2) A, D உம் B, C உம் (3) A, C உம் B, D உம்

4. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள விலங்கு வகைகளில் **இரண்டிற்கு மாத்திரம்** பொருத்தமான கூற்று யாது?








(1) இரவில் நடமாடும். (2) பால் குடித்து வளரும். (3) மரங்களில் வாழும்.

5.





A B C D

அடைப்பினுள் உள்ள உருவை உருவாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டிய அதே விதத்தில் அமைந்த உருக்கள் இரண்டும் எவை?


(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம்

[பக். 3 ஐப் பார்க்க

www.lkdu.lk


சுட்டெண் :.....

6. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான எண் யாது?




(1) 12 (2) 13 (3) 14

7. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானியுங்கள்.



வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு எது?



(1) (2) (3)

8. கீழே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் மூன்று வீதம் வைக்கப்பட்டுள்ள மூன்று குவியல்கள் தரப்பட்டுள்ளன.




ஒரு குவியலிலிருந்து ஒரு நாணயத்தையும் இன்னொரு குவியலிலிருந்து இரண்டு நாணயத்தையும் அடுத்த குவியலிலிருந்து மூன்று நாணயத்தையும் எடுத்து ஆக்கக்கூடிய **ஆகக்கூடிய** தொகை எவ்வளவு?


(1) ரூபாய் 10 (2) ரூபாய் 12 (3) ரூபாய் 20

9. எண் 235 ஐ ✪☆★ குறியீடுகளில் எழுதப்பட்டிருந்தது. 235 உடன் 100 இனைக் கூட்டும்போது கிடைக்கும் எண்ணைக் காட்டும் விடை யாது?

(1) ☆☆★ (2) ✪★✪ (3) ☆★★

10. 

உருவில் காட்டப்பட்டுள்ள கடிகார முகப்பின் சரியான தளவாடி விம்பத்தைக் காட்டி நிற்கும் உரு பின்வருவனவற்றுள் எது?



(1) (2) (3)


[பக். 4 ஐப் பார்க்க

www.ikedu.lk

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவிலும் சதுரமுகியொன்றின் திறந்த முகப்புக்களில் உள்ள உருவங்கள் தரப்பட்டுள்ளன.



மேலுள்ள சதுரமுகியை அமைப்பதற்கு பின்வரும் எந்த மாதிரியுருவைப் பயன்படுத்தலாம்?



(1) (2) (3)

12. பின்வரும் உரைப்பகுதியின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்கள் அடங்கிய பகுதி எது?


பென்சிலால் தானாக எழுத முடியாது. அதனைப் பிடித்து எழுத ஒரு கை வேண்டும். அதுபோல் நீ பல _____ உடையவனாக இருப்பினும் உன்னை வழிநடாத்திச் செல்வதற்கு ஒரு கை வேண்டும். _____ உனது தந்தையின், தாயின், பாதுகாவலரின், ஆசிரியரின் கையாகக்கூட இருக்கலாம். நல்ல பென்சில், _____ நினைக்கும் வழி செல்கின்றது. அதுபோல வழிநடத்துபவரின் சொற்களைக் கேட்டு நீயும் நடக்க வேண்டும்.

(1) திறமையை அந்தக்கண் எழுதுபவர்

(2) திறமைகளை அந்தக்கை எழுதுபவர்

(3) திறமைகளை அந்தவிரல் இருப்பவர்

13. உருவில் காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?




(1) நான்கு ஆகும்.

(2) ஏழு ஆகும்.

(3) பத்து ஆகும்.

14. உருவில் ஒரே தராசினால் ஒரு தர்ப்பூசணிப்பழம், திராட்சைப்பழம், வாழைப்பழம் என்பவற்றின் நிறையை அளக்கின்ற மூன்று சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.



இந்தப் பழங்களின் நிறை பற்றிய சரியான கூற்று எது?

(1) தர்ப்பூசணிப்பழத்தின் நிறை திராட்சைப்பழத்தின் நிறையின் இரு மடங்காகும்.


(2) திராட்சைப்பழத்தின் நிறை வாழைப்பழத்தின் நிறையின் மூன்று மடங்காகும்.

(3) தர்ப்பூசணிப்பழத்தின் நிறை வாழைப்பழத்தின் நிறையின் இரு மடங்காகும்.


[பக். 5 ஐப் பார்க்க

www.ipeu.lk

15. உரு 1 இல் உள்ள கடதாசித் துண்டை உரு 2 இன் மீது சரியாகப் பொருந்துமாறு ஒன்றின் மீது ஒன்றை வைக்கும்போது நிழற்றப்படாத கட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?




உரு 1





உரு 2


(1) 4 (2) 5 (3) 6

16. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான உரு எது?



(1) 

(2) 

(3) 

17. வியாபாரி ஒருவர் மூன்று பேனைகளை ஐம்பது ரூபாய்க்கு வாங்கி இரண்டு பேனைகளை ஐம்பது ரூபாவிற்கு விற்றார். அவர் நாள் ஒன்றில் பேனைகளை விற்றதனால் 500 ரூபா இலாபம் பெற்றிருந்தால் அன்று அவர் விற்ற பேனைகளின் எண்ணிக்கை யாது?

(1) 25 (2) 50 (3) 60

18. பின்வரும் எந்தச் சொல்லை 0832846159323 எனும் குறியீட்டினால் காட்டலாம்?

(1) SOUTHEASTERNS (2) NORTHERNCOAST (3) WESTERNCOASTS

19. பகீரதன் A என்னும் இடத்திலிருந்து 5 மீற்றர் வடக்கே செல்கிறான். பின் அவ்விடத்திலிருந்து 3 மீற்றர் கிழக்காகச் சென்று அதன் பின்னர் 3 மீற்றர் மேற்கே சென்று B என்னும் இடத்தில் நிற்கிறான். A இற்கும் B இற்கும் இடையிலான தூரம் யாது?

(1) 1 மீற்றர் (2) 2 மீற்றர் (3) 5 மீற்றர்

20. குறித்த ஒரு வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அவ்வருடத்தின் மே மாதத்தின் முதலாம் திகதி என்ன கிழமை?

(1) சனிக்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) திங்கட்கிழமை

21. இக்கோலத்தில் இறுதிக் கட்டத்தில் வர வேண்டிய எண் யாது?

5	5	10	30	120	600	3600	.....

(1) 22 400 (2) 25 200 (3) 26 400


22. சுரேஷ் பிறக்கும்போது அவனுடைய தாயாரின் வயது 28 ஆகும். சுரேஷின் தம்பி பிறக்கும்போது தாயாரின் வயது 32 ஆகும். சுரேஷின் தற்போதைய வயது 10 எனின், அவனுடைய தம்பியின் தற்போதைய வயது யாது?


(1) 4 (2) 5 (3) 6


[பக். 6 ஐப் பார்க்க


www.ikedu.lk


23. நிகழ்வு ஒன்றின் ஆறு சந்தர்ப்பங்கள் உருச் சட்டகத்தினுள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு முறையாக வரக்கூடியது எது?



A


B


C


D


E


F

(1) B, D, C, E, A, F (2) D, E, C, F, B, A (3) C, F, A, D, B, E

24. பின்வருவனவற்றுள் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதனால் வட்டம் ஒன்றைப் பெற முடியும்?


A


B


C


D


E

(1) A, B, D (2) A, C, E (3) A, D, E

25. மாமரத்தில் ஐந்து குருவிகளும் கொய்யா மரத்தில் மூன்று குருவிகளும் இருந்தன. மாமரத்தில் இருந்த இரண்டு குருவிகள் கொய்யா மரத்திற்குப் பறந்து சென்றபோது கொய்யா மரத்தில் இருந்த ஒரு குருவி மாமரத்திற்கு வந்தது. இப்போது மாமரத்தில் இருக்கும் குருவிகளின் எண்ணிக்கை கொய்யா மரத்தில் இருந்த குருவிகளின் எண்ணிக்கைக்கு

(1) குறைவாகும். (2) சமமாகும். (3) கூடுதலாகும்.

26. சித்திப் புள்ளி 20 ஆகவுள்ள சோதனையொன்றுக்கு ஐந்து மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்கள் அனைவரும் சோதனையில் சித்தியடைந்ததோடு, அவர்கள் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 105 ஆகும். சோதனையில் உச்சப் புள்ளிகளைப் பெற்ற இரண்டு மாணவர்கள் இருப்பார்கள் எனின், அவ் உச்சப்புள்ளி எதுவாக இருக்க முடியும்?

(1) 21 (2) 22 (3) 23

27. ஒரு தொழிற்சாலையில் ஒரே பொருளை உற்பத்தி செய்யும் A, B என்னும் இரண்டு பொறிகள் உள்ளன. பொறி A ஆனது 30 பொதிகளை உற்பத்தி செய்வதற்கு 6 மணித்தியாலங்களையும் பொறி B ஆனது 40 பொதிகளை உற்பத்தி செய்வதற்கு 5 மணித்தியாலங்களையும் எடுக்கிறது. இரண்டு பொறிகளும் ஒரே நேரத்தில் இயங்க ஆரம்பிக்குமாயின் 5 மணித்தியாலத்தில் பொறிகள் இரண்டும் உற்பத்தி செய்யும் பொதிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 65 (2) 70 (3) 85

[பக். 7 ஐப் பார்க்க


28. சாந்தி 2020 பெப்ரவரி 29 ஆந் திகதி சனிக்கிழமை பிறந்தார். மீண்டும் அவரது பிறந்த நாள் எந்த ஆண்டில் வரும்?

(1) 2021 (2) 2023 (3) 2024


29. கீழே தரப்பட்டுள்ள A, B, C என்ற மூன்று உருக்களையும் பாருங்கள்.



உரு A



உரு B



உரு C

மூன்று உருக்களிலும் இருக்கும் ஏதோவொரு பொதுப்பண்புக்கு ஏற்ப இவற்றில் இரண்டு உருக்களைச் சோடியாக்க முடியும். அந்தச் சோடி

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

30. ஆத்திசூடி, நல்வழி, அம்புலிமாமா, சிறுவர்மலர், கல்கண்டு என்ற ஐந்து புத்தகங்களில் கவின் இரண்டு புத்தகங்களை வாசிக்கவில்லை. இராணி மட்டும் ஆத்திசூடி புத்தகத்தை வாசித்துள்ளார். இராணியைப் போல கவினும் நல்வழி, அம்புலிமாமா என்ற புத்தகங்களை வாசித்துள்ளார். இதற்கேற்ப கவின் நிச்சயமாக

(1) ஆத்திசூடி, சிறுவர்மலர், என்ற இரண்டு புத்தகங்களையும் வாசிக்கவில்லை.

(2) ஆத்திசூடி, கல்கண்டு என்ற இரண்டு புத்தகங்களையும் வாசிக்கவில்லை.

(3) சிறுவர்மலர், கல்கண்டு என்ற இரண்டு புத்தகங்களில் ஒன்றை வாசிக்கவில்லை.

31. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களினதும் முச்சக்கரவண்டிகளினதும் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 35 ஆகும். வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களினதும் முச்சக்கரவண்டிகளினதும் எண்ணிக்கை எத்தனை?

(1) மோட்டார் சைக்கிள்கள் 8, முச்சக்கரவண்டிகள் 6

(2) மோட்டார் சைக்கிள்கள் 9, முச்சக்கரவண்டிகள் 4

(3) மோட்டார் சைக்கிள்கள் 10, முச்சக்கரவண்டிகள் 5

32. பின்வரும் சிட்டையில் உள்ள பொருள்களை வாங்குவதற்கு ரூபாய் 1000 ஐச் செலுத்தும்போது கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

பொருள்	வாங்கிய அளவு	1 kg இன் விலை	
		ரூபாய்	சதம்
கடலை	500 g	260	00
பருப்பு	1 kg 250 g	100	00
அரிசி	3 kg	150	00

(1) ரூபாய் 295.00 (2) ரூபாய் 345.00 (3) ரூபாய் 375.00

33. ஒரு விருந்தில் 6 பேர் கலந்து கொண்டனர். விருந்து நிறைவில் அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து மகிழ்ந்தனர். இங்கு இடம்பெற்ற கைலாகு கொடுத்தல் நிகழ்ந்த தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 15 (2) 30 (3) 36

34. ஆண்பிள்ளைகளின் வரிசையிலே ஆகாஷ் என்பவர் முன்னால் இருந்து 7 ஆவதாக இருப்பதுடன் நித்தி என்பவர் பின்பக்கத்தில் இருந்து 12 ஆவதாகவும் உள்ளார். அவர்கள் இருவருக்கும் இடையில் 6 நபர்கள் உள்ளனர். அவ்வாறெனின், வரிசையில் எத்தனை ஆண்பிள்ளைகள் உள்ளனர்?

(1) 24 (2) 25 (3) 26


[பக். 8 ஐப் பார்க்க

www.ikeou.lk


35. முகங்கள் 6, விளிம்புகள் 12, உச்சிகள் 8 என்பன உள்ளன எத்திண்மப் பொருளின் இயல்புகளாகும்?



(1)



(2)



(3)

36. பொதுப் போக்குவரத்துப் பேருந்திலும் தனியார் வைத்தியசாலையிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இரண்டு பதாதைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - விசேட வைத்திய நிபுணரைச் சந்திக்க விரும்புவோர் காலை ஏழு மணிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

B - கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பதாதை A, பதாதை B என்பன முறையே யாவை?

(1) ஓர் அறிவித்தலும் ஓர் அறிவுறுத்தலும் ஆகும்.

(2) ஒரு கட்டளையும் ஓர் அறிவுறுத்தலும் ஆகும்.


(3) ஓர் அறிவுறுத்தலும் ஓர் அறிவித்தலும் ஆகும்.

37. சிறிய அளவிலான மரக்குற்றித் தொகுதிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சிறிய அளவிலான மரக்குற்றிகள் எத்தனை?

(1) 39

(2) 46


(3) 50



38. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் கூடியதாக இருக்கும் சந்தர்ப்பம் பின்வரும் எந்நேரத்தில் காட்டப்படுகிறது?

(1) 9.30 (2) 12.15 (3) 3.00

39. ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்குப் பயன்படுத்திய பாதைகளைக் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது.



பிள்ளை வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும்போது வலப் பக்கத்திற்கும் இடப் பக்கத்திற்கும் திரும்பும் தடவைகளின் எண்ணிக்கை யாவை?

(1) வலப் பக்கத்திற்கு 3 உம் இடப் பக்கத்திற்கு 4 உம்

(2) வலப் பக்கத்திற்கு 4 உம் இடப் பக்கத்திற்கு 3 உம்

(3) வலப் பக்கத்திற்கு 5 உம் இடப் பக்கத்திற்கு 2 உம்

40. 'அருணியின் வீடு குமுதாவின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது. குமுதாவின் வீடு சுகந்தியின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது.' இதற்கேற்ப சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) அருணியின் வீடு சுகந்தியின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது.

(2) சுகந்தியின் வீடு அருணியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது.

(3) சுகந்தியின் வீடு குமுதாவின் வீட்டிலும் பார்க்க அருணியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது.

* * *

www.lkedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல. 1

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

"வாருங்கள், வாருங்கள் நாம் விரைவாகப் பட்டம் ஒன்றைச் செய்வோம்." என்று காந்தன் நண்பர்களை அழைத்தான். பட்டம் கட்டுவதற்கு முரளி ஈர்க்கை எடுத்தான்; அதனை அழுத்தமாகச் சீவி, அளந்து முறித்தான். சந்திரன் கடதாசியை எடுத்து அளவாக வெட்டினான். காந்தன் ஈர்க்குகளினால் பட்டத்தைக் கட்டினான். கடதாசியை அதன் மேல் ஒட்டினான். நிசாம் பட்டத்திற்கு வால் செய்து அதனைப் பட்டத்தில் கட்டினான். காந்தன் பட்டத்தை எடுத்தான். முரளி நூலைச் சுற்றினான். நான்கு நண்பர்களும் பட்டத்தை விடுவதற்கு விளையாட்டுத் திடலுக்குச் சென்றனர். காற்று வீசும்போது பட்டத்தை ஏற்றினார்கள். பட்டம் மெல்ல மெல்ல மேலே ஏறியது. அது அங்கும் இங்கும் காற்றில் ஆடி அசைந்தது. அவர்களின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. துள்ளிக் குதித்து மகிழ்ந்தனர்.

● **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) பட்டம் செய்வதற்கு காந்தன் அழைத்த நண்பர்கள் யாவர்?

.....

(ii) பட்டம் செய்யும்போது சந்திரன் செய்த வேலை யாது?

.....

(iii) நண்பர்கள் நால்வரும் பட்டம் விடுவதற்கு எங்கு சென்றனர்?

.....

(iv) 'வேகமாக' என்பதன் ஒத்தகருத்தைக் குறிப்பிடுவதாகப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ளது எது?

.....

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. .....

(vi) பட்டம் வானில் பறந்தபோது நண்பர்கள் எவ்வாறு மகிழ்ந்தனர்?

.....

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.
ஆசிரியர் நிகள்த்திய உறை அனைவரையும் கவர்ந்தது.

.....

3. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி நிகழ்கால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

(i) பூனை அங்க ஓடியது.

.....

(ii) நான் சிகப்பு நிறப் பூக்களைப் பறித்தேன்.

.....

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

(i) திகதியைப் / வாங்கும்போது / பொருட்களை / காலாவதியாகும் / வாங்கவும் / பார்த்து

.....

(ii) சுதந்திர / நான்காம் / இலங்கையின் / தினம் / பெப்ரவரி / திகதி / கொண்டாடப்படுகின்றது

.....

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

சிற்பங்களைத் தொட வேண்டாம் என்று கூறினார்

[பக். 3 ஐப் பார்க்க

www.ikedu.lk

சுட்டெண் :.....

6. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(i) பூசி மெழுகுதல் : .....

(ii) நட்டாற்றில் விடல் : .....

ஆபத்தில் கைவிடுதல் / சிதறாத கவனத்துடன் இருத்தல் / வெற்றியடைதல் / குற்றத்தை மறைத்தல்

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '×' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) பழம் கீழே விழுந்தன. (.....)

(ii) அண்ணா அழகான ஓர் ஓவியத்தை வரைந்தார். (.....)

(iii) நான் எனது தம்பியுடன் நூலகத்துக்குச் சென்றோம். (.....)

8. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

அதிக ஆசை அழிவைத் தரும்.

.....

9. பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

உற்றார் உறவினர், வரவு செலவு, சீரும் சிறப்பும், ஓடி ஆடி

(i) பெண்கள் வயலில் ..... வேலை செய்தனர்.

(ii) தந்தை மாசி மாத இறுதியில் ..... விபரங்களைக் கணக்கிட்டார்.

10. பின்வரும் வாக்கியத்தை ஆண்பால், ஒருமை, இறந்த கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

அவரது புத்திரி வீட்டுக்கு வந்தார்.

.....

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

(i) Accident : ..... (ii) Flower : .....

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான **ஆங்கில** எழுத்துகளில் எழுதுக.

(i)



V				t					

(ii)



P					c	

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) cat / likes / My / milk : .....

(ii) have / I / sister / one / brothers / two : .....

www.ikedu.lk

14. 'ரோகல' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக. : .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

சோறு சாப்பிடுங்கள். : .....

16. 'மூவாயிரத்து இருபத்தாறு' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக. : .....

17. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு அமைய விரித்து எழுதுக.

7658 = ... + ... + ... + ...

18. எண்கோலத்துக்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

..... , ... , 22 , 29 , 36 , 43

19.

5	2
7	

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

: .....

20. பழப்பானத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

	அன்னாசிப்பழப் பானம்	விளாம்பழப் பானம்
ஜனவரி	1839	1214
பெப்ரவரி	1028	860

(i) ஜனவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

: .....

(ii) ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விளாம்பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடு யாது?

: .....

21. 103 ஐ 4 இனால் பெருக்கும்போது வரும் விடை யாது? : .....


22. ஒரு மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கி கொள்ளத்தக்க ஆகக்கூடிய பெற்றோலின் அளவு 10 லீற்றர் ஆகும். அதில் 2 லீற்றர் 750 மில்லிலீற்றர் பெற்றோல் உள்ளது. தாங்கியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு பெற்றோல் தேவைப்படும்?

: ..... l ..... ml

23. 5 அறைகளில் 610 கதிரைகள் சம எண்ணிக்கையில் வைக்கப்பட்டுள்ளன. ஓர் அறையில் வைக்கப்பட்டுள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

: .....

24.



உருவில் உள்ள பூக்களின் குவியலில் நான்கில் ஒரு பங்கு $(\frac{1}{4})$ பூக்கள் எத்தனை?

: .....

25. 120 ரூபாய்க்கு ஒரு வர்ணப் பென்சில் பெட்டியையும் 55 ரூபாய்க்கு இரண்டு பிசின் போத்தல்களையும் வாங்கிய பின்னர் 500 ரூபாய்த் தாளினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதி யாது?

: ரூபாய் .....

26. சுனில் முதலாம் நாளில் ஒரு மதிலின் 5 மீற்றர் 75 சென்றிமீற்றர் நீளத்தைக் காட்டினான். அவன் இரண்டாம் நாளில் மேலும் 4 மீற்றர் 50 சென்றிமீற்றரைக் கட்டினான். இரண்டாம் நாளின் இறுதியில் கட்டப்பட்டிருந்த மதிலின் மொத்த நீளம் யாது?

: ..... m ..... cm


[பக். 5 ஐப் பார்க்க

www.ikedu.lk

27. ஒரு தேநீர் கடையில் காலை வேளையில் 1 kg 800 g தேயிலையும் மாலை வேளையில் 3 kg 450 g தேயிலையும் பயன்படுத்தப்பட்டது. இரு வேளைகளிலும் பயன்படுத்தப்பட்ட தேயிலையின் அளவுகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது?


: ..... kg ..... g

28. கடிகார முகத்தில் காட்டப்படும் நேரத்தை இலக்கங்களில் எழுதுக.



பிற்பகல் .....

29. மாணவர் குழுவொன்றுக்கு மிகவும் விருப்பமான பிராணி வகைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) சமமான எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் பிராணி வகைகள் எவை?

:.....

(ii) முயல்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க நாய்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு கூடுதலானது?

:.....

● **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. பின்வருவனவற்றுள் சமைக்காமல் பச்சையாகச் சாப்பிட வேண்டியது எது?

(1) வல்லாரை (2) முருங்கை (3) பொன்னாங்கண்ணி

31. அசுத்தமான உணவு, நீர் என்பனவற்றை உட்கொள்வதால் பரவும் நோய் எது?

(1) சின்னமுத்து (2) மலேரியா (3) கொலரா

32. மட்பாண்டங்களைத் தயாரிக்கும் கைத்தொழில் எது?

(1) கொல்லன் வேலை (2) வனைதல் வேலை (3) மேசன் வேலை

33. சூடான பானத்தைப் பரிமாறுவதற்கு மிகவும் பொருத்தமான பாத்திரம் எது?

(1) கைப்பிடி இல்லாத பிளாத்திக்குக் கோப்பை

(2) கைப்பிடி கொண்ட பீரிஸ் கோப்பை

(3) ஊடுகாட்டும் கண்ணாடிக் குவளை

34. தேசியக் கொடியில் முழுக் கொடியையும் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப் பட்டியினால் காட்டப்படுவது

(1) பல்வேறு இனங்களின் பிரதிநிதித்துவம்

(2) தேசத்தின் மகத்துவம்

(3) இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை

35. சித்திரம் ஒன்றுக்கு வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான பச்சை நிறத்தை ஆக்குவதற்குச் சமமான அளவில் கலக்கக்கூடிய இரண்டு நிறங்களும் எவை?

(1) நீலமும் மஞ்சளும் (2) மஞ்சளும் சிவப்பும் (3) நீலமும் சிவப்பும்

36. மிக மெதுவாக ஊர்ந்து செல்லும் பிராணி

(1) மட்டைத்தேள் (2) நத்தை (3) கரப்பான் பூச்சி

[பக். 6 ஐப் பார்க்க

www.ikeadu.lk

37. இலங்கையின் தேசிய மலரைக் காட்டும் உரு எது?


(1)


(2)



(3)

38. மரவள்ளிக்கிழங்கு, ஈரப்பலா, பலாக்காய் என்பனவற்றை உள்ளடக்கக்கூடிய உணவுத் தொகுதி எது?

(1) சக்திக்கானது (2) பாதுகாப்புக்கானது (3) வளர்ச்சிக்கானது

39. ஏலேலோ ஐலசா..... ஏலேலோ ஐலசா.....
கட்டு மரத்தோணியிலே..... ஏலேலோ ஐலசா.....
இது

(1) உழவர் பாடல் (2) மீனவர் பாடல் (3) அரிவிவெட்டுப் பாடல்

40. 

எமது நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த உருவில் உள்ளவர் யார்?

(1) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி
(2) கலாநிதி. சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
(3) பண்டிதர். டபிள்யூ. டீ. அமரதேவ

41. வீட்டில் உள்ள சகலரும் பொதுவாகப் பயன்படுத்தும் ஒரு பொருள்

(1) குடை (2) பற்தூரிகை (3) துடைதுண்டு

42. உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் நவீன முறை பின்வருவனவற்றுள் எது?

(1) மணலினுள் புதைத்தல் (2) புகையூட்டல் (3) தகரத்தில் அடைத்தல்

43. தொடர்பாடலுக்குத் தேவையான முக்கிய கூறுகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடை எது?

(1) பெறுநர் → அனுப்புபவர் → ஊடகம்
(2) ஊடகம் → அனுப்புபவர் → பெறுநர்
(3) அனுப்புபவர் → ஊடகம் → பெறுநர்

44. இரும்பு ஆணியில் எந்த உலோகக் கம்பியைச் சுற்றுவதன் மூலம் மின்காந்தத்தைச் செய்யலாம்?

(1) ஈயக் கம்பி (2) பித்தளைக் கம்பி (3) செப்புக் கம்பி

45. மரத்தடியில் விளையாடும்போது முசிறுக் கடிக்கு உட்படுவோம் எனக் கருதும் பிள்ளைகள் செய்யக்கூடிய சிறந்த செயற்பாடு எது?

(1) முசிறுக் கூடு உள்ள மரக்கிளையை வெட்டி அகற்றுதல்
(2) விளையாடுவதற்காக வேறு ஓர் இடத்தைத் தெரிவு செய்தல்
(3) முசிறுக் கூடுகளின் மீது மண்ணெண்ணெயை ஊற்றுதல்

46. காற்றின் உதவியுடன் பரம்பலடையும் தாவரம் எது?

(1) சீதேவியார்செங்கழுநீர் (2) கடல்மா (3) புலிநகம்

47. 'காற்றுக் கிலுக்கி' என்பது,

(1) சிறுவர்கள் விளையாடப் பயன்படுத்தும் ஓர் உபகரணம்
(2) காற்றைப் பயன்படுத்தி இயங்கும் ஒரு வாகனம்
(3) பிராணிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்கும் ஓர் அமைப்பு

[பக். 7 ஐப் பார்க்க

www.ikeu.lk

48. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இலங்கையின் இடங்களில் ஒன்று எது?

(1) சிகிரியா (2) சிங்கராஜவனம் (3) தாமரைத் தடாகம்

49. தொலைக்காட்சி பார்ப்பதால் கிடைக்கும் நன்மை எது?

(1) மற்றவர்களுடன் உரையாடும் ஆர்வமும் வாய்ப்பும் குறைதல்

(2) உடற் பருமன், நீரிழிவு போன்ற நோய்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல்

(3) உலக நடப்புக்களை எமது வீட்டில் இருந்தவாறே பெற வசதி கிடைத்தல்


50. பின்வரும் எப்பாத்திரத்தினுள் இடப்படும் பனிக்கட்டி முதலில் உருகும்

(1) சூடான நீரைக் கொண்ட கண்ணாடிக் குவளை

(2) சாதாரண நீரைக் கொண்ட கண்ணாடிக் குவளை

(3) வெற்றுக் கண்ணாடிக் குவளை

51. உலர் கலத்துடன் இரண்டு மின்சூள் மின்குமிழ்கள் கம்பித் துண்டுகளினால் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் **இரண்டு மின்குமிழ்கள்** ஒளிரும் சந்தர்ப்பம் எது?



(1) (2) (3)

52.

உணவு வகை	உற்பத்தித் தினம்	காலாவதியாகும் தினம்
ரின் மீன்	2022.05.06	2025.05.06
தயிர்	2022.04.23	2023.04.30
ரின்பால்	2022.02.21	2023.08.20

மாணவர் ஒருவர் புத்தகத்தில் எழுதியிருந்த அட்டவணை மேலே காட்டப்பட்டுள்ளது. காலாவதியாகும் தினம் தவறாக எழுதப்பட்டுள்ள உணவு எது?

(1) ரின் மீன் (2) தயிர் (3) ரின்பால்

53. உள்ளூராட்சி நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகளுள் ஒன்று எது?

(1) பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை பதிவு செய்தல்

(2) தேசிய அடையாள அட்டைக்காகத் தகவல்களை வழங்குதல்

(3) குப்பை கூழங்களை உரியவாறு அப்புறப்படுத்தல்

54. மைதானத்தில் செவ்வகம் ஒன்றைக் கீறி அதனை ஆறு கட்டங்களாகப் பிரித்து கோடுகள் வரைந்து விளையாடப்படும் கிராமிய விளையாட்டு எது?

(1) கிளித்தட்டு (2) சடுகுடு (3) எட்டுக்கோடு

55. பின்வரும் பண்டைய கலைப்படைப்புகளில் பலாப்பெத்தி அலங்காரம் எது?



(1) (2) (3)

www.ikedu.lk

56. பாம்பு கடித்து விட்டால் முதலில் செய்ய வேண்டியது என்ன?

(1) கடித்த இடத்தைச் சவர்க்காரம் இட்டு ஓடிக்கொண்டிருக்கும் சுத்தமான நீரினால் நன்றாகக் கழுவுதல்

(2) கடித்த இடத்திற்கு மேலே துணிக் கீலங்களினால் இறுக்கமாகக் கட்டிவிடுதல்

(3) கடித்த இடத்தில் கைமருந்து ஒன்றைப் போட்டு நன்கு தேய்த்துவிடுதல்


57. உணவு தயாரிக்கும்போது உணவின் போசணைத் தன்மைக்குத் தீங்கு ஏற்படுத்தும் சந்தர்ப்பம்

(1) காய்கறிகளைச் சமைக்கும்போது போதுமான அளவுக்கு மாத்திரம் அவித்துக் கொள்ளுதல்

(2) சில காய்கறிகளைப் பச்சையாகச் சலாது ஆகத் தயாரித்தல்

(3) கீரை வகைகளை மெல்லியதாக நறுக்கிய பின்னர் நன்றாகக் கழுவுதல்

58.



மேலே தரப்பட்டுள்ள ஒழுங்கமைப்பைப் பயன்படுத்திச் செய்யும் பரிசோதனையிலிருந்து எதிர்பார்க்கப்படுவது

(1) சூரிய ஒளியின் காரணமாக நீராவியாகும் நீரின் அளவைக் காணுதல்

(2) சூரிய ஒளியின் வெப்பத்தை ஓரிடத்தில் பெற்றுக்கொள்ளுதல்

(3) சூரிய ஒளியில் பல்வேறு நிறங்கள் உள்ளதா எனப் பார்த்தல்

59. காலிக் கோட்டையைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது** எது?

(1) எல்லா சமயத்தவரும் வணங்கித் துதிக்கும் இடம்

(2) போர்த்துக்கேயரால் நிர்மாணிக்கப்பட்ட இடம்

(3) வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்

60. "பாடசாலை விடுமுறையின்போது அப்பா என்னை கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு நான் கண்ட காட்சிகள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....


.....

www.ikeu.lk

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல.



வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH


www.ikeou.lk

[பக். 2 ஐப் பார்க்க


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

● கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து **1, 2** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

1. கட்டத்தின் உள்ளே உள்ள கடிகாரத்துக்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள உரு எது?





(1)




(2)



(3)

2. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்யவேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?



A உருவம்




B உருவம்

(1) 2 (2) 3 (3) 4

● **3, 4** ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?

3.



(1)




(2)



(3)




4.



(1)



(2)



(3)



5. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும்போது G உள்ள இடத்தில் வரத்தக்க குற்றுகளின் எண்ணிக்கையைத் தெரிவு செய்க.



(1) 21 (2) 28 (3) 36

[பக். 3 ஐப் பார்க்க

www.ikeduk.lk


சுட்டெண் :.....

6. இந்த உருவில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் எது?

2	3	1	5
4	9	13	7
3	16		6
8	5	4	9

(1) 18 (2) 19 (3) 20


7. பின்வருவனவற்றுள் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதனால் முக்கோணி ஒன்றைப் பெற முடியும்?




A B C D E

(1) A, B, D (2) A, D, E (3) A, C, E

8. சதுரக் கடதாசித் துண்டொன்று இரண்டு தடவைகள் மடிக்கப்பட்டு மூன்று துளைகள் இடப்பட்டுள்ளதை பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன.




இக் கடதாசித் துண்டை மீண்டும் விரிக்கும்போது அது தோற்றும் விதம் யாது?



(1) (2) (3)


9. உருவில் பல்வேறு நீர்மட்டங்கள் உள்ள சமமான பாத்திரங்கள் ஐந்து காட்டப்பட்டுள்ளன.



நீர் மட்டம் அதிகரிக்கும் ஒழுங்குமுறைப்படி அந்தப் பாத்திரங்களை வரிசைப்படுத்துவதற்கு **ஆகக் குறைந்தது** எத்தனை பாத்திரங்கள் இருக்குமிடம் மாற்றப்பட வேண்டும்?

(1) ஒன்றினது (2) இரண்டினது (3) மூன்றினது

10. வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உரு எது?



(1) (2) (3)

www.ikeu.lk


11. பரீட்சை ஒன்றுக்குத் தோற்றிய மாணவன் ஒருவன் 15 வினாக்களுக்கு மாத்திரம் சரியாக விடை எழுதி 40 புள்ளிகளைப் பெற்றான். பரீட்சை வினாக்களில் சிலவற்றுக்கு 2 புள்ளிகளும் சிலவற்றுக்கு 4 புள்ளிகளும் வழங்கப்பட்டன எனின், அம்மாணவன் சரியாக விடை எழுதிய 2 புள்ளிகளுக்குரிய வினாக்கள் எத்தனை?

(1) 5 (2) 10 (3) 12

12. $1 \bigstar 2 = 7 \bigstar 5$ என்னும் கணிதத் தொடர்புடைமையில் $\bigstar$, $\bigstar$ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?

(1) X உம் − உம் (2) X உம் + உம் (3) + உம் − உம்

13. உருவில் காணத்தக்க செவ்வகங்களின் எண்ணிக்கை



(1) நான்கு ஆகும்.

(2) ஏழு ஆகும்.

(3) ஒன்பது ஆகும்.

14. 2 kg 250 g தேயிலையில் இருந்து 500 g பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மீதியாக இருந்த தேயிலை 250 g கொண்ட சிறிய பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டன. அடைக்கப்பட்ட சிறிய பைக்கற்றுக்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 7 (2) 9 (3) 11


15. பென்சில் ஒன்றை 12 ரூபாவிற்கும் பேனை ஒன்றை 28 ரூபாவிற்கும் வரைதல் புத்தகம் ஒன்றை 44 ரூபாவிற்கும் கடையொன்றில் வாங்கிய கண்ணன் ரூபாய் 200 ஐப் அப்பொருட்கள் அனைத்துக்கும் உரிய விலையாகச் செலுத்தினான் எனின், அவன் வாங்கிய பொருட்களைக் காட்டும் விடை எது?

(1) பென்சில் - 1, பேனை - 2, வரைதல் புத்தகம் - 3




(2) பென்சில் - 2, பேனை - 4, வரைதல் புத்தகம் - 1

(3) பென்சில் - 4, பேனை - 2, வரைதல் புத்தகம் - 2

16.




கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான உரு எது?

(1)  (2)  (3) 

17. கீதன் 3 பூக்களைப் பறிக்கும் நேரத்தில் சுதன் 2 பூக்களைப் பறித்தான். சுதன் 1 பூவைப் பறிக்கும் நேரத்தில் மதன் 2 பூக்களைப் பறித்தான். ஒரு குறித்த நேரத்தில் கூடுதலான பூக்களைப் பறித்தவர் யார்?

(1) கீதன் (2) சுதன் (3) மதன்


18. உருவில் காணப்படும் உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் எது?



(1) செவ்வகம் (2) சதுரம் (3) முக்கோணி


[பக். 5 ஐப் பார்க்க

www.kedu.lk

19. 

ஆகுமெனில் வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான நிறை யாது?


(1) 7 kg (2) 8 kg (3) 9 kg


20. 

உருவில் காட்டியுள்ள வலையுருவைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய சதுரமுகியில் ஒன்றுக்கொன்று எதிரான முகப்புகளில் காணக்கூடிய குறியீட்டுச் சோடி **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?

(1) ✶ உம் ○ உம் (2) ✶ உம் ✚ உம் (3) △ உம் □ உம்

- **21, 22** ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் உள்ள உருவை முகம்பார்க்கும் கண்ணாடியில் காட்டும்போது தெரியும் விம்பத்தைத் தெரிவு செய்க.

21. 
(1) (2) (3)


22. 
(1) (2) (3)

23. காலையில் விளையாட்டு மைதானத்திற்குச் சென்ற பகீரதன் கிழக்குத் திசை நோக்கி ஓடியபோது அவனது நிழல் அவனுக்குப் பின்னால் விழுந்திருந்தது. பகீரதன் மேற்குத் திசை நோக்கி ஓடும்போது அவனது நிழல் விழுந்திருந்தது

(1) வலது பக்கத்தில் (2) இடது பக்கத்தில் (3) முன்னால்

24. ஒரு வகுப்பறையிலிருந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை அங்கு இருந்த ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். அந்த வகுப்பறையிலிருந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் கூட்டினால் வருவது

(1) 35 ஆகும். (2) 36 ஆகும். (3) 37 ஆகும்.

25. 

இவ்வுருவில் $\frac{3}{4}$ ஐ நிழற்றுவதற்காக நிழற்றப்பட்டுள்ள பகுதிகளுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை பகுதிகளை நிழற்றல் வேண்டும்?

(1) 2 (2) 3 (3) 4


26. இரண்டு கடிகாரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 5 நிமிடங்கள் பிந்தியும் மற்றையது ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 5 நிமிடங்கள் முந்தியும் நேரத்தைக் காட்டுகின்றன. இரண்டு கடிகாரங்களிலும் நண்பகல் 12.00 இற்கு சரியான நேரம் வைக்கப்பட்டதெனின், அவை இரண்டும் காட்டும் நேரங்களுக்கு இடையேயான வித்தியாசம் 1 மணித்தியாலமாகக் காணப்படுவது பின்வரும் எந்த நேரத்திலாகும்?

(1) பி.ப. 4.00 (2) பி.ப. 5.00 (3) பி.ப. 6.00

[பக். 6 ஐப் பார்க்க

www.ikeau.lk

27. உருவில் உள்ள செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை எத்தனை?



(1) 3 (2) 4 (3) 5


28. 6723 , 6237 , 6372 , 6327 , 6273 ஆகிய எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது நடுவில் வரும் எண் யாது?


(1) 6237 (2) 6327 (3) 6372

29. மா, தோடை, அப்பிள் ஆகிய மூன்று பழங்களிலும் ஒவ்வொன்றை விலைக்கு வாங்குவதற்கு ரூபாய் 120 தேவையாகும். மாம்பழத்தின் விலையைப் பார்க்கிலும் தோடையின் விலை ரூபாய் 10 குறைவாகவும் அப்பிளின் விலை ரூபாய் 10 அதிகமாகவும் இருந்தது. மாம்பழம் ஒன்றின் விலை எவ்வளவு?


(1) ரூபாய் 30 (2) ரூபாய் 40 (3) ரூபாய் 50

30. கட்டத்தினுள் உள்ள உருக்களின் வரிசையில் அடுத்ததாக இடவேண்டிய உரு எது?






(1)



(2)



(3)

- நான்கு பிள்ளைகளின் பிறந்த திகதிகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து **31, 32** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பெயர்	பிறந்த திகதி
வினோதன்	2013.04.16
சிறிதேவி	2012.05.30
சந்திரன்	2013.08.23
மீனா	2012.06.05

31. நான்கு பிள்ளைகளிலும் வயதில் குறைந்தவரையும் வயதில் கூடியவரையும் முறையே காட்டும் விடை எது?


(1) சந்திரன், சிறிதேவி (2) வினோதன், மீனா (3) சந்திரன், மீனா

32. சிறிதேவி பிறந்தது 2012 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி ஒரு வெள்ளிக்கிழமை எனின், அம்மாதம் 01 ஆந் திகதி


(1) புதன்கிழமை ஆகும். (2) வியாழக்கிழமை ஆகும். (3) சனிக்கிழமை ஆகும்.


[பக். 7 ஐப் பார்க்க


www.kedu.lk

33. 

இவ்வுருவை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும்போது அது தோற்றும் விதம் யாது?


(1)


(2)


(3)


34. ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த கண்ணன் 30 மீற்றர் வடக்கு நோக்கியும் அங்கிருந்து 20 மீற்றர் மேற்கு நோக்கியும் சென்று, அங்கிருந்து மீண்டும் 10 மீற்றர் வடக்கு நோக்கியும் சென்று, அங்கிருந்து கிழக்கு நோக்கி 20 மீற்றர் சென்று பயணத்தை முடித்தான். கண்ணன் இப்போது தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான்?

(1) 40 மீற்றர் (2) 50 மீற்றர் (3) 80 மீற்றர்


35. அமல், பவன், காசிம், டேவிட் என்ற நால்வரும் ஓட்டப் பந்தயப் போட்டியில் பங்குபற்றினர். டேவிட் காசிமை விட வேகமாக ஓடியபோதும் அமலுக்குப் பின்னாலேயே ஓடினான். எனினும் அமலால் பவனை விட வேகமாக ஓட முடியவில்லை. இந்த ஓட்டப் பந்தயத்தில் முதலாம் இடம் பெற்றவர் யார்?


(1) காசிம் (2) டேவிட் (3) பவன்

36. உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) 

(2) 


(3) 

37. ஒரு தோட்டத்தில் இருந்த பறவைகளின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளன. தோட்டத்தில் இருந்த கிளிகளின் எண்ணிக்கை பின்வரும் எவ்விரு பறவைகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமம்?

(1) கொக்குகளும் மைனாக்களும்

(2) மைனாக்களும் காகங்களும்

(3) காகங்களும் கொக்குகளும்



[பக். 8 ஐப் பார்க்க

38. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் முதலில் செய்ய வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன.

(A) நித்திரை விட்டெழுதல்

(B) .....

(C) .....

(D) .....

(E) வீட்டிலிருந்து புறப்படுதல்


இக்கருமங்களின் சரியான ஒழுங்குமுறையைக் காட்டுவதற்கு B, C, D ஆகிய சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான கருமங்களைக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) (B) உடை அணிதல், (C) முகம் கழுவுதல், (D) உணவு உண்ணல்

(2) (B) உணவு உண்ணல், (C) முகம் கழுவுதல், (D) உடை அணிதல்,

(3) (B) முகம் கழுவுதல், (C) உடை அணிதல், (D) உணவு உண்ணல்

● தொடர்பாடல் ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், வானொலி ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைகுறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.



39. வானொலியை வகைகுறிக்கும் எழுத்து யாது?

(1) P (2) R (3) S

40. Q இனால் வகைகுறிக்கப்படும் ஊடக சாதனமாக பின்வருவனவற்றுள் எது இருக்கலாம்?

(1) மின்னஞ்சல் (2) தொலைபேசி (3) துண்டுப்பிரசுரம்

* * *

www.ikeau.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி ARIVUMATHI அறிவுமதி அடுத்தது ARIVUMATHI

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல.

2

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeau.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

ஒரு சங்கீத வித்துவானிடம் அயலூரில் உள்ள மாணவன் சங்கீதம் கற்றான். அவனுக்கு எல்லா இராகங்களையும் கற்பித்தார். மாணவனது படிப்பு முடிந்தது. குருவிடம் ஆசி பெற்று தன் ஊருக்குப் புறப்பட ஆயத்தமானபோது குரு அவனைப் பார்த்து "உனக்கு இசையில் முழுத்திறமையும் வந்துவிட்டது. எதிர்காலத்தில் நினைவில் வைத்துக்கொள். எச்சந்தர்ப்பத்திலும் ஆகிரி இராகத்தை மட்டும் பாடாதே. அப்படிப் பாடினால் அன்று முழுவதும் உனக்கு உணவு கிடைக்காது." என்று கூறி வழியனுப்பி வைத்தார். கட்டுசாதப் பொதியுடன் தன் ஊர் நோக்கிச் செல்லும்போது அவனுக்கு களைப்பாக இருந்தது. கட்டுசாதப் பொதியை மூங்கில் கிளையில் கட்டிவிட்டு இளைப்பாறினான். களைப்பைப் போக்க ஆகிரி இராகத்தைத் தன்னை மறந்து நீண்ட நேரம் பாடினான். நண்பகல் நேரம் பசியினால் பாட்டை நிறுத்திய அவன் கட்டுசாதப் பொதியைப் பார்த்தான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மேலே பார்த்தான். அவன் கைகளுக்கு எட்டாத உயரத்தில் அதே மூங்கில் கிளையில் கட்டுசாதப் பொதி தொங்கிக்கொண்டிருந்தது.

● **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) வித்துவான் தனது மாணவனிடம் எச்சந்தர்ப்பத்திலும் எந்த இராகத்தைப் பாடக்கூடாது என்றார்?

.....

(ii) மாணவன் குருவின் கட்டளையை மீறியதால் என்ன தண்டனை கிடைத்தது?

.....

(iii) மாணவன் தன் ஊருக்கு என்ன கொண்டு புறப்பட்டான்? .....

(iv) 'சோர்வாக' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. .....

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழிச் சொல்லை எழுதுக. .....

(vi) கட்டுசாதப் பொதியை எங்கு கட்டி வைத்திருந்தான்? .....

2. அ.ிறிணை, நிகழ்கால, பன்மை, வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) படிக்கின்றோம் (2) நீந்துகின்றன (3) மின்னுகின்றது

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

சந்ததியினரின் / மரங்களை / நடுவோம் / நலன் / நம் / எதிர்கால / கருதி

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '×' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) பறவைகள் இரை தேடிப் பறந்தது. (.....)

(ii) ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடின. (.....)

(iii) பேருந்து வேகமாகச் சென்றது. (.....)

(iv) அதிபர் மாணவர்களைப் பாராட்டினார். (.....)

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன

6. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

ஆற்றிலே போட்டாலும் ..... போடு.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

.....

[பக். 3 ஐப் பார்க்க

www.ikeau.lk

சுட்டெண் : .....

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள **சரியான** எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) இரவில் ஆகாயத்தில் (நச்சத்திரங்கள் / நட்சத்திரங்கள்) மின்னின.

(ii) இளமையிற் கல்வி (சிலையில் / சிளையில்) எழுத்து.

8. பின்வரும் வாக்கியத்தை **எதிர்காலத்தில்** எழுதுக.

நான் அழகிய காட்சிகளை வரைந்தேன்.

.....

9. **பெண்பால்** சொல்லை எழுதுக. பண்டிதன் : .....

10.

மலர்வனம் **அரசினர்** தமிழ்க் கலவன் பாடசாலையிலே தரம் ஐந்தில் மயூரன் கல்வி கற்கிறான். தந்தையாரான சுதாகர் அரச வைத்தியசாலை ஒன்றில் வைத்தியராகக் கடமையாற்றுகின்றார். தாயாரான வளர்மதி மலர்வனம் கிராமத்தின் சுகாதார அதிகாரியாவார். பத்து வயதுடைய மயூரன் குடும்பத்தில் மூத்த பிள்ளை. அவனுக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உள்ளனர். அவன் படிப்பில் மட்டுமன்றி விளையாட்டுக்களிலும் ஆர்வம் காட்டுவான். காற்பந்தாட்டம் அவனுக்கு மிகவும் விருப்பமான விளையாட்டாகும். தன் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் புத்தகங்கள் வாசிப்பதில் செலவிடுவான். அவனது இலட்சியம் பொறியியலாளராக வரவேண்டும் என்பதாகும்.

மேலே தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய விபரக்கோவையைப் பூர்த்தி செய்க.

(i) முழுப் பெயர் : | | | | | | | | | | |

(ii) ஊர் : | | | | | | | | | | |

(iii) குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை : | | | |

(iv) விருப்பமான விளையாட்டு : | | | | | | | | | |

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Aeroplane : ..... (ii) Mountain : .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) is / younger / my / This / sister : .....

(ii) has / small / It / a / bird : .....

14. 'யஹலுவா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.


.....

www.ikeou.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

இங்கே வாருங்கள். : .....

16. எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.



.....

17. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

6012 : .....

18.

1		7
	4	
10		13

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொதுவித்தியாசம் 3 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

1 , ... , ... , ... , ...

19. ஒரு விளையாட்டரங்கில் 3709 வெளிநாட்டு இரசிகர்களும் 983 உள்நாட்டு இரசிகர்களும் அமர்ந்துள்ளனர்.

(i) விளையாட்டரங்கில் அமர்ந்துள்ள இரசிகர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) இவ்விளையாட்டரங்கில் அமர்ந்துள்ள உள்நாட்டு இரசிகர்களிலும் பார்க்க எத்தனை வெளிநாட்டு இரசிகர்கள் கூடுதலாக உள்ளனர்?


.....

20. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

15 137 , 17 173 , 15 371

..... , ... , ...

21.



உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

.....

22. ஒரு விளையாட்டுக் குழுவினர் மு.ப. 8.30 இற்குத் தனது பயிற்சியைத் தொடங்கினர். அவர்கள் பி.ப. 2.15 இற்குப் பயிற்சியை முடித்தனர். அவர்கள் பயிற்சிக்காகச் செலவிட்ட நேரம் எவ்வளவு?

..... மணித்தியாலம் ..... நிமிடம்

23. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	ஒரு கிலோகிராமின் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
தேயிலை	200 g	750	00	(i).....	.....
பால் மா	2 kg	(ii).....	.....	2100	00
மொத்தப் பணம்				**2250**	**00**

24. ஒருவர் 714 அரிசிச் சாக்குகளை 7 லொறிகளில் சம எண்ணிக்கைகளில் ஏற்றினார். ஒரு லொறியில் ஏற்றப்பட்டுள்ள அரிசிச் சாக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

[பக். 5 ஐப் பார்க்க

www.ikeduk.lk

25. 25 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடிய ஒரு கொள்கலனில் 14 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீர் உள்ளது. கொள்கலனை முற்றாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீரை ஊற்ற வேண்டும்?

..... லீற்றர் ..... மில்லிலீற்றர்

26. ஒரு பூசணிக்காயின் நிறை 4 kg 200 g ஆகும். அதிலிருந்து ஒரு பகுதியை வெட்டி விற்பனை செய்த பின்னர் எஞ்சிய பகுதியின் நிறை 2 kg 90 g ஆகும். விற்பனை செய்த பகுதியின் நிறை யாது?


..... kg ..... g

27. ரவி 17 km 700 m தூரத்தைப் பேருந்திலும் 4 km 500 m தூரத்தை முச்சக்கர வண்டியிலும் 800 m தூரத்தை நடந்தும் சென்றார்.

(i) பேருந்திலும் முச்சக்கர வண்டியிலும் சென்ற மொத்தத் தூரம் யாது? ..... km ..... m


(ii) முச்சக்கர வண்டியிலும் நடந்தும் சென்ற மொத்தத் தூரம் யது? ..... km ..... m

28. உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.



.....

29. ஒரு மணித்தியாலத்தில் வீதியொன்றில் சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்கள் கீழேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.



ஒரு மணித்தியாலத்தில் வீதியில் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'சிலோன் நஷனல் ரிவீவ்' எனும் சஞ்சிகையின் ஆரம்பகால பிரதம ஆசிரியர்

(1) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி

(2) ஆதர் சி. கிளாக்

(3) வண. எஸ். மஹிந்த தேரர்

31. நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் பரவும் நோய் எது?

(1) சீதபேதி (2) டெங்கு (3) சின்னமுத்து

32. கால்கள் இல்லாத பிராணிகள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?

(1) ஆமை, பல்லி, ஓணான் (2) மண்புழு, நத்தை, பாம்பு (3) அட்டை, ஈ, நுளம்பு

33. மண்புழுவினால் மனிதருக்குக் கிடைக்கும் நன்மை

(1) சூழலை சுத்திகரித்தல்

(2) குப்பைகளைப் பசளையாக மாற்றுதல்

(3) மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்

www.ikedu.lk

34. மனிதன் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறைகள் இரண்டு.

(1) கூக்குரலிடலும் தொலைபேசியைப் பயன்படுத்தலும்

(2) முரசறைதலும் தீக்குவியல் மூட்டலும்

(3) அங்க அசைவுகளை வெளிக்காட்டலும் மின்னஞ்சலும்

35. மரவேலைத் தளத்தில் பயன்படுத்தப்படும் உபகரணத்தைக் காட்டும் உரு எது?



(1)



(2)



(3)

36. தேசிய மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை **எடுக்காததன்** மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் தீமை எது?

(1) நாட்டின் தனித்துவம் பாதுகாக்கப்படுதல்


(2) உளச் சுகத்தை அனுபவிக்க முடிதல்

(3) பண்பாட்டுப் பெறுமானம் நாளுக்கு நாள் குறைதல்

37. நன்றாக வெளிச்சமுள்ள சந்தர்ப்பத்தில் ஊசித்துளைக் கமராவைப் பயன்படுத்தி ஒரு மரத்தைப் பார்க்கும்போது அந்த மரம் தெரிவது

(1) மேல்நோக்கி (2) தலைகீழாக (3) இருக்கும் அளவில்

38. படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் எது?



(1) கம்பளித் தையல்

(2) சங்கிலித் தையல்

(3) நரம்புத் தையல்

39. வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்தியை பயிரிடுவதன் முக்கிய நோக்கம்

(1) வீட்டுத் தோட்டத்திற்கு அழகைச் சேர்ப்பதற்கு

(2) பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு

(3) வீட்டுத் தோட்டத்தின் இடஅளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு

40. கால வேறுபாடின்றிப் பூப்பூக்கின்ற தாவரத்தையும் வருடத்தின் குறித்த ஒரு காலத்தில் மாத்திரம் பூப்பூக்கின்ற ஒரு தாவரத்தையும் ஒழுங்கு முறைப்படி குறிப்பிடும் விடை எது?

(1) தென்னை, வாழை (2) ரம்புட்டான், முள்முருக்கு (3) வாழை, வேம்பு

41. பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதற்கான காரணம் யாது?

(1) சூரியனுக்கும் உழவுத் தொழிலுக்கும் நன்றி செலுத்தல்

(2) ஏழைகளின் பசியை உணர்தல்

(3) இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடல்

42. பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பயணிக்கும் ஒரு நபர் **செய்யத்தகாத** ஒரு செயல் எது?

(1) வயோதிபர்களுக்கு ஆசனத்தை வழங்குதல்

(2) கட்டாயமாகப் பயணச் சீட்டு பெறுதல்


(3) மிதி பலகையில் பயணம் செய்தல்

[பக். 7 ஐப் பார்க்க

www.kedu.lk

43. 'முன்னால் சிறுவர் கடவை' என்பதைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் குறியீடு எது?


(1)


(2)


(3)

44. பின்வரும் உணவு வகைகளில் உடலுக்கு பாதுகாப்புத் தரும் உணவு எது?

(1) சாரணைக்கீரை (2) சோயா அவரை (3) ஈரப்பலா

45. நீர் வடிகட்டி ஒன்றைத் தயாரிப்பதற்கு பெரிய பிளாத்திக்குப் போத்தல், மணற்படை, பரல்படை என்பனவற்றுடன் தேவைப்படும் மற்றொரு பொருள் எது?

(1) பஞ்சுத்திரளை (2) புனல் (3) செங்கல் துண்டுகள்

46. இலங்கையின் அரச இலச்சினையில் 'சௌபாக்கியத்தைக்' குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு எது?

(1) தர்ம சக்கரம் (2) நெற்கதிர்கள் (3) நிறைகுடம்


47. இலங்கையின் மிகவும் உயரமான மலை எது?

(1) சிவனொளிபாத மலை (2) பீதுருதாலகால மலை (3) கிரிகல்பொத்தை மலை


48. நற்காரியங்களுக்குச் செல்லும்போது நீர் நிரம்பிய பாத்திரமொன்றைக் கையில் ஏந்திய பெண்மணியொருவர் முன்னே வருதல் எவ்வினத்தவரின் நீருடன் பிணைந்த திருமணப் பழக்கம்?

(1) கிறிஸ்தவர் (2) தமிழர் (3) சிங்களவர்


49. சமமான பாரத்தை இழுத்துச் செல்வதைக் குறிக்கும் மூன்று சந்தர்ப்பங்களில் பாரத்தை இழுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமமான சந்தர்ப்பம் எது?



(1)



(2)



(3)

50. கீரை வகைகளை சமைப்பதற்காக நீரில் கழுவும்போது அந்நீருடன் சேர்க்கப்படத்தக்க பொருள் எது?

(1) உப்பு (2) வினாகிரி (3) எலுமிச்சம் புளி

51. வெந்நீர்க் கேத்தல் புரண்டு எரிகாயம் ஏற்பட்டால் முதலில் செய்ய வேண்டியது என்ன?

(1) காயம் ஏற்பட்ட இடத்தில் களிம்பைப் பூசுதல்

(2) காயம் ஏற்பட்ட இடத்தில் பற்பசையைப் பூசுதல்

(3) காயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு குளிர்ந்த தண்ணீரை ஊற்றுதல்

52. பின்வரும் எத்தொழிலில் ஈடுபடுவோர் திசைகளைக் கண்டறிவதற்காக திசைகாட்டியைப் பயன்படுத்துவதில்லை?

(1) கப்பலோட்டிகள் (2) விமானிகள் (3) வாகனச் சாரதிகள்

53. சூரிய நமஸ்காரத்தின் இரண்டாம் படிமுறையைக் காட்டும் உரு எது?


(1)


(2)


(3)

[பக். 8 ஐப் பார்க்க

www.ikeduk

54. வீதிச் சமிக்ஞை விளக்குகளின் தூணில் சிவப்பு நிற மின்குமிழ் எரியும்போது அதனால் கருதப்படுவது,

(1) 'வாகனத்தை நிறுத்துக' என்பது ஆகும்.

(2) 'வாகனம் பயணிக்குக' என்பது ஆகும்.

(3) 'வாகனம் பயணிப்பதற்கு ஆயத்தமாகுக' என்பது ஆகும்.

55. பருகுவதற்காகப் பால் பைக்கற்றைத் திறப்பதற்கு முன்பாகப் பைக்கற்றில் குறிக்கப்பட்டுள்ள விடயங்களில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது

(1) உற்பத்தி செய்த தினம்

(2) காலாவதியாகும் தினம்

(3) உள்ளடக்கப்பட்ட பாலின் அளவு

56. சந்திரக் கிரகணம் ஆரம்பிக்கும்போது

(1) சந்திரன் படிப்படியாகக் கருமை அடைகின்றது.

(2) சந்திரன் ஒரே தடவையில் கருமை அடைகின்றது.

(3) சந்திரனின் பிரகாசம் படிப்படியாக அதிகரிக்கின்றது.

57. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாகச் சுருட்டிக் கொள்ளும் விலங்கு எது?

(1) ஆமடில்லா (2) மரவட்டை (3) முள்ளம்பன்றி

58. கடை ஒன்றில் விற்பனைக்காக இருந்த பான வகையொன்றின் லேபலில் பச்சை நிற வட்டம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கருதப்படுவது

(1) சீனி முழுமையாக அகற்றப்பட்டுள்ளது என்பதாகும்.

(2) சீனி அதிக அளவில் உள்ளது என்பதாகும்.

(3) சீனி குறைந்த அளவில் உள்ளது என்பதாகும்.

59. தொலைந்து போன அடையாள அட்டை பற்றி அறிவிக்கவும் வாக்காளர் பெயர்ப்பட்டியலின் பிரதியைப் பெறுவதற்கும் முறையே செல்ல வேண்டிய இடங்கள் எவை?

(1) சமுர்த்தி உத்தியோகத்தர் காரியாலயம், பொலிஸ் நிலையம்

(2) கிராம சேவகர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம்

(3) பொலிஸ் நிலையம், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்

60. "பாடசாலை விட்டு வரும் வழியில் கடும் மழையில் அகப்பட்டுக் கொண்ட நான்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

***

www.ikedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி ARIVUMATHI அறிவுமதி அறிவுமதி ARIVUMATHI அறிவுமதி அறிவுமதி ARIVUMATHI அறிவுமதி அறிவுமதி ARIVUMATHI அறிவுமதி

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல. 3

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றினுடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப வினாத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.lkedu.lk

[பக். 2 ஐப் பார்க்க

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

● **1, 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1.





(1)




(2)



(3)

2.





(1)




(2)



(3)

● **3, 4** ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள உருக்கள் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இரு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?

3.




A



B



C



D

(1) A, B உம் C, D உம் (2) A, C உம் B, D உம் (3) A, D உம் B, C உம்

4.




A



B



C



D




E




F

(1) A, D, F உம் B, C, E உம் (2) A, C, D உம் B, E, F உம் (3) B, D, F உம் A, C, E உம்


5. கீழே மூன்று முக்கோணிகள் தரப்பட்டுள்ளன.




இந்த முக்கோணிகள் மூன்றையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உரு எது?



(1)



(2)




(3)


www.lkedu.lk

சுட்டெண் :.....

6. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான உரு எது?



?.....



(1) (2) (3)

7. 'வேலியே பயிரை மேய்ந்தது போல' என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது?

(1) மிகக் கவனமாகப் பாதுகாத்தல்

(2) பாதுகாக்க வேண்டியவரே அழித்தல்

(3) தேவையானபோது உதவி செய்தல்

8. 'சிறு வயதில் பழகிய தீய பழக்கங்களை முரளியால் வயது சென்ற காலத்திலும் விட முடியவில்லை.' இதற்குப் பொருத்தமான பழமொழி யாது?

(1) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

(2) விளையும் பயிரை முளையிலே தெரியும்.

(3) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

9. பின்வரும் உரைப்பகுதியின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்கள் அடங்கிய பகுதி எது?

ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். ஒரு நாள் விவசாயி ஒருவர் அரசரிடம் முறைப்பாடு செய்தார். "அரசே, என்னுடைய ஆடுகள் மேய்ந்து பயிர்களை அழித்துவிட்டன. பயிர்களை வளர்க்கப் பெருமளவு பணத்தைச் செய்துள்ளேன். நான் சேர்த்து வைத்திருந்த பணத்தை எல்லாம் செலவு செய்துவிட்டேன். எல்லாமே போய்விட்டது. இனிமேல் நான் என்ன செய்வது? நீங்கள்தான் இதற்குச் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும்." என்று அந்த விவசாயி கேட்டுக்கொண்டார்.

(1) வளவில் செலவு அப்போது (2) வயலில் செலவு இப்போது (3) வயலில் வரவு இப்போது

10. மரங்களை வளர்த்திட்டால் மண்ணரிப்பு தடைப்படுமே!
வனங்களைக் காத்திட்டால் வெம்மையும் தணிந்திடுமே!

இக்கவிதையில் கூறப்படும் ஒரு கருத்து **அல்லாதது** எது?

(1) மரங்கள் மண்ணரிப்பைத் தடுக்கும்.

(2) காடுகள் வெப்பத்தைக் குறைக்கும்.

(3) நீர் தாகத்தைத் தணிக்கும்.


11. இரண்டு சிறிய பலகைத் துண்டுகளை இணைப்பதற்கு 4 ஆணிகள் தேவைப்பட்டன. அவ்வாறான 4 சிறிய பலகைத் துண்டுகளை ஒன்றாக இணைத்து ஒரு நீளமான பலகைத் துண்டைப் பெறுவதற்குத் தேவையான ஆணிகள் எத்தனை?

(1) 8 (2) 12 (3) 20


12. இன்னும் இரண்டு வருடங்களில் பூஜாவின் வயது பாமாவின் வயதின் இரு மடங்காக இருக்கும். தற்போது பாமாவின் வயது 6 வருடங்கள் எனின், பூஜாவின் தற்போதைய வயது எத்தனை வருடங்களாகும்?


(1) 12 (2) 14 (3) 16

www.lkedu.lk

13. 

இந்த வலையுருவைப் பயன்படுத்தி ஒரு சதுரமுகியை அமைக்கும்போது அது தோற்றும் விதம் யாது?


(1)


(2)



(3)

14. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக் காட்டி இவ்வாறு கூறினான்.
"எனக்குச் சகோதரனோ சகோதரியோ இல்லை. ஆயினும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையின் மகன் ஆவார்." இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்?

(1) தனது படத்தை

(2) தனது மகனின் படத்தை

(3) தனது தந்தையின் படத்தை

15. 

இந்த உருவில் உள்ள வெறுமையான வட்டத்துக்குப் பொருத்தமான எண் எது?

(1) 32 (2) 36 (3) 40

16. ஓட்டப்போட்டி முடிவடையும் தருணத்துக்கு முன்னர் அருண் இரண்டாம் இடத்திலிருந்த நீலனை முந்திச் சென்றான். பின்னர் போட்டியாளர்களின் இடங்களில் மாற்றம் இடம்பெறவில்லை.


பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.

A - அருண் முதலாமிடத்தவர்
B - அருண் இரண்டாமிடத்தவர்
C - நீலன் இரண்டாமிடத்தவர்
D - நீலன் மூன்றாமிடத்தவர்


இவற்றில் எந்த இரண்டு கூற்றுக்கள் உண்மையானவை?


(1) A உம் C உம் (2) A உம் D உம் (3) B உம் D உம்


17. உருவில் உள்ள வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




(1)


(2)


(3)

18. 

இந்த அட்டைத்தாளில் இருந்து பெறத்தக்க ஆகவும் பெரிய சதுரத்தை வெட்டி வேறாக்கிய பின்னர் எஞ்சிய அட்டைத்தாளின் சுற்றிவர உள்ள நீளம் எத்தனை சென்றிமீற்றர்?


(1) 16 (2) 18 (3) 20

www.lkedu.lk

● **19, 20** ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் அடைப்புகளில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.



ரூபாய் 2030



ரூபாய் 1135



ரூபாய் 1670

19. விலை குறைந்த பொருளையும் அதன் பெறுமதியையும் குறிப்பிடும் விடை எது?

(1) புத்தகப் பை - ரூபாய் 290


(2) தண்ணீர்ப் போத்தல் - ரூபாய் 360


(3) சப்பாத்துச் சோடி - ரூபாய் 400

20. தண்ணீர்ப் போத்தல் 2 இனதும் புத்தகப் பை 2 இனதும் சப்பாத்துச் சோடி 3 இனதும் விலை எவ்வளவு?

(1) ரூபாய் 3985 (2) ரூபாய் 4225 (3) ரூபாய் 4835


21. அடைப்புக்குள் உள்ள தள வடிவங்களின் a, b என்னும் ஒரே எழுத்தினால் காட்டப்படும் பக்கங்களை இணைப்பதன் மூலம் பின்வரும் எவ்வடிவத்தைப் பெறலாம்?






(1) (2) (3)

22. உருவில் உள்ள வெற்று அடைப்புக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

23. ஒரு சமதள நிலத்தில் நிமலன் விமலனுக்கு 10 மீற்றர் கிழக்கே நிற்கின்றான். நிமலனை நோக்கி விமலன் செல்லத் தொடங்கும் கணத்தில் நிமலன் விமலனின் கதியின் இரு மடங்கான கதியில் கிழக்கு நோக்கிச் செல்கின்றான். விமலன் 20 மீற்றர் தூரம் நிமலனை நோக்கிச் சென்றபோது இருவருக்கும் இடையே உள்ள தூரம் எத்தனை மீற்றர்?

(1) 20 (2) 40 (3) 60

24. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். பாடசாலையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 346 (2) 373 (3) 396

[பக். 6 ஐப் பார்க்க

www.ikedu.lk

25. நிகழ்வு ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் உருச் சட்டகத்தினுள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு முறையாக வரக்கூடியது எது?



A




B



C



D



E

(1) A, B, E, C, D (2) A, E, D, B, C (3) A, D, C, B, E

26. மின் அலங்காரச் சரம் ஒன்றில் உள்ள சிவப்புநிற மின்குமிழ் 3 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் பச்சைநிற மின்குமிழ் 5 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் ஒளிரும். முற்பகல் 11.30 இற்கு இரு நிற மின்குமிழ்களும் ஒன்றாக ஒளிர்ந்தன. அடுத்து அவை இரண்டும் ஒன்றாக ஒளிரும் இரண்டு சந்தர்ப்பங்கள் யாவை?

(1) முற்பகல் 11.45 உம் நண்பகல் 12.00 உம்


(2) முற்பகல் 11.50 உம் பிற்பகல் 12.15 உம்


(3) நண்பகல் 12.00 உம் பிற்பகல் 12.20 உம்

27. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து வெற்றிடத்தில் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

28. ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) இருள் விலகுதல் ⟶ சூரியன் உதித்தல் ⟶ கண்விழித்தல்

(2) காற்று வீசுதல் ⟶ மழை பெய்தல் ⟶ வானம் இருளுதல்


(3) சந்தைக்குச் செல்லுதல் ⟶ பொருட்களை வாங்குதல் ⟶ வீடு திரும்புதல்

29. சுரேஷ் பேனை ஒன்றையும் பென்சில் ஒன்றையும் வாங்குவதற்குக் கடைக்குச் சென்றான். கடையில் நீலம், கறுப்பு, சிவப்பு ஆகிய நிறங்களிலான பேனைகளும் மஞ்சள், பச்சை ஆகிய நிறங்களிலான பென்சில்களும் இருந்தன. அவற்றிலிருந்து ஒரு நிறத்திலான பேனையையும் ஒரு நிறத்திலான பென்சிலையும் தெரிவு செய்ய வேண்டிய சுரேஷ், அதனை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் தெரிவு செய்யலாம்?

(1) 3 (2) 4 (3) 6

www.ikedu.lk

30. உரு A இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்ட ஒரு தாள் நடுவில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து உரு B இல் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப்பட்டது.



உரு A



உரு B


கிடைக்கும் முக்கோணித் துண்டுகள் பற்றிய சரியான கூற்று யாது?

(1) மூன்று முக்கோணித் துண்டுகள்


(2) நான்கு முக்கோணித் துண்டுகள்

(3) ஐந்து முக்கோணித் துண்டுகள்

31. உரு A இல் உள்ள தராசின் இரு பக்கங்களிலும் உள்ள நிறைகள் சமனாகும்.



உரு A





உரு B


உரு B இல் உள்ள தராசின் இரு பக்கங்களிலும் உள்ள நிறையைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த பக்கத்திற்கு வைக்க வேண்டிய உரு எது?

(1)  (2)  (3) 

32. எண் கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?








(1) 7 (2) 8 (3) 9

33. உருவில் காணத்தக்க சதுரங்களின் எண்ணிக்கை



(1) எட்டு ஆகும்.

(2) பத்து ஆகும்.

(3) பன்னிரண்டு ஆகும்.


34. சதா மற்றும் தனா ஆகிய நண்பர்களில் ஒருவர் திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் பொய் பேசுவதுடன் கிழமையின் எஞ்சிய எல்லா நாட்களிலும் உண்மையையே பேசுவார். மற்றையவர் வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளிலே பொய் பேசுவதுடன் எஞ்சிய எல்லா நாட்களிலும் உண்மையையே பேசுவார். இதற்கேற்ப நண்பர்கள் இருவரும் உண்மை பேசும் நாள் எது?

(1) செவ்வாய்க்கிழமை (2) வியாழக்கிழமை (3) ஞாயிற்றுக்கிழமை

[பக். 8 ஐப் பார்க்க

www.lkedu.lk

35. உருவில் காட்டப்பட்டுள்ள வரிப்படத்தில் p கணித பாடத்தை விரும்புவோரையும் q தமிழ் பாடத்தை விரும்புவோரையும் r சுற்றாடல் பாடத்தை விரும்புவோரையும் குறிப்பிடுகின்றது. இதற்கேற்ப அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதி குறித்து நிற்பது,



(1) கணித பாடத்தையும் தமிழ் பாடத்தையும் விரும்புவோர்


(2) கணித பாடத்தையும் சுற்றாடல் பாடத்தையும் விரும்புவோர்

(3) தமிழ் பாடத்தையும் சுற்றாடல் பாடத்தையும் விரும்புவோர்


36. ஜூலை மாதத்தின் இரண்டாம் நாள் சனிக்கிழமை ஆகும். அம்மாதத்தில் மூன்றாவதாக வரும் வெள்ளிக்கிழமை மாதத்தின் எத்தனையாவது நாளாகும்?

(1) 14 (2) 15 (3) 16


37. கீழே தரப்பட்டுள்ள எவ் உருவைப் புள்ளிக் கோடுகளின் வழியே மடிப்பதன் மூலம் ஒரு கனவுருவை ஆக்கலாம்?



(1)




(2)



(3)


38. பிராணிகள், பறவைகள், கிளி ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புடைமை பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




y இன் மூலம் வகைகுறிக்கப்படுவது

(1) பிராணிகள் (2) பறவைகள் (3) கிளி


39. ஒரு போத்தலில் இருக்கும் மூன்று துளைகள் A, B, C எனக் காட்டப்பட்டுள்ளன. போத்தலை முழுமையாக நீரினால் நிரப்பும்போது துளைகளின் ஊடாக நீர் வெளியேறும் முறையைத் திருத்தமாகக் காட்டும் உரு எது?



(1)




(2)



(3)

40. காலை 9.15 இற்கு கொழும்பிலிருந்து புத்தளத்தை நோக்கி ஒரு மாறாத கதியில் நிறுத்தாமல் செலுத்தப்படும் ஒரு பேருந்தின் பயணம் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.



அடைந்த நகரம்	நகரத்தில் உள்ள கிலோமீற்றர் தூண்	அடைந்த நேரம்
சிலாபம்	120 km	காலை 11.15
புத்தளம்	180 km	.....

இதற்கேற்ப பேருந்து புத்தளம் நகரத்தை பிற்பகல் எத்தனை மணிக்கு அடையும்?

(1) 12.15 (2) 12.30 (3) 12.45

❊ ❊ ❊

www.lkedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

வினாத்தாள் இல. 3

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்

தமிழ் மொழி மூலம்



ENGLISH MEDIUM

සිංහල මාධ්‍ය

இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே மெதுவாக மேலெழுகிறான். கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து, கதிரவனை வரவேற்கின்றன. பச்சைப் பட்டாடை விரித்தது போல் காட்சி தரும் வயல்வெளிகளும் புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்கு தலை அசைக்கின்றன. பசுக்களும் பசுக் கன்றுகளும் புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றன. கடலுக்குச் சென்ற மீனவர்களின் வள்ளங்கள் அலைகளைக் கிழித்துக் கொண்டு கரையை நோக்கி வருகின்றன. விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி விரைகின்றனர். உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி மனதிற்கு இனிமையானது.

● **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) விடியலை அறிவித்து கதிரவனை வரவேற்கும் பறவைகள் எவை?

:.....

(ii) 'மகிழ்ச்சி' என்பதன் ஒத்தகருத்தைக் குறிப்பிடுவதாகப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ளது எது?

:.....

(iii) பந்தியின் முதலாம் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

:.....

(iv) இப்பந்தியில் இடம்பெறும் உவமானத்தை எழுதுக. : .....

(v) விவசாயிகள் எதை எதிர்பார்த்திருந்தனர்? : .....

(vi) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலையில் இடம்பெறும் இயற்கை நிகழ்வு ஒன்றை எழுதுக.

:.....

2. 'நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை நன்றாகக் கற்க வேண்டும்'.

(i) இவ்வாக்கியத்தில் உள்ள வல்லின மெய் எழுத்துகளை எழுதுக. : .....

(ii) இவ்வாக்கியத்தில் உள்ள மெல்லின மெய் எழுத்துகளை எழுதுக. : .....

3. பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அஃறிணையா என கீறிட்ட இடத்தில் எழுதுக.

(i) கிளிகள் பழங்களைக் கொத்தித் தின்றன. : .....

(ii) நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். : .....

4. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

கடனில்லாத ..... கால் வயிறு போதும்.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

சிறிய வயதில் பழகிய பழக்கம் என்றும் நீங்காது.

.....

5. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

(i) நறுமணம் / பூசைக்குத் / நிரம்பிய / வனத்தில் / தேவையான / இருக்கின்றன / மலர்கள்

.....

(ii) பொதுவாக / செய்தி / அறிவித்தலாகும் / சகலரும் / அறிந்து / கொள்வதற்கான

.....

[பக். 3 ஐப் பார்க்க

www.lkedu.lk

சுட்டெண் :.....

6. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

பிள்ளைகளே மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள்

7. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) தலை கவிழ்தல் : .....

(ii) ஆழம் பார்த்தல் : .....

8. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அளவுக்கு மிஞ்சினால் (அழுதமும் / அமிர்தமும்) நஞ்சு.

(ii) காவியா அரங்கில் (வீணை / வீனை) வாசித்தாள்.

9. பெண்பால் சொல்லை எழுதுக. உழவன் : .....

10.

பிள்ளைகளே!

கண்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறீர்களா?

சில **அறிவுரைகள்**.....

நமது கண்களில் தூசி விழுந்ததும்.....

- எந்தக் காரணம் கொண்டும் கண்களைக் கசக்காதீர்கள். கண்பார்வை பறிபோக நீங்களே காரணமாகி விடுவீர்கள்.
- எந்தப் பொருளையாவது கூர்ந்து அவதானிக்கும்போது கண்களில் கண்ணீர் வந்தால் உடனே அச்செயலை நிறுத்தி விடுங்கள்.
- வெளிச்சம் குறைவாக இருக்கும்போது வாசிக்கும் பழக்கம் பார்வைக் கோளாறு உண்டாவதற்குக் காரணமாக அமையும்.
- புத்தகங்கள் வாசிக்கும்போது எப்பொழுதும் கண்களுக்குக் குறைந்தது ஒரு அடி தூரத்தில் புத்தகத்தை வைத்து வாசிப்பதே நல்லது.

இதுபோல, சிறு சிறு விடயங்களில்கூட கவனமாக இருந்தால்தான் கண்களைக் காப்பாற்ற முடியும். சிறு வயதில் இருந்தே நல்ல அறிவுரைகளைப் பின்பற்றுவோம்.

கண்களைப் பாதுகாப்போம்!

- கண்களைப் பாதுகாக்கும் நண்பர்கள் அமைப்பு

(i) எதைப் பாதுகாப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்? : .....

(ii) பார்வை பறிபோகக் காரணமாக அமைவது எது? : .....


(iii) துண்டுப்பிரசுரத்தை யார் வெளியிட்டுள்ளார்கள்? : .....

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Newspaper : ..... (ii) Kitchen : .....


12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)



.....

(ii)



.....

www.lkedu.lk

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) five / I / grade / am / studying : .....

(ii) flowers / there? / How / are / many : .....

14. 'குருவரயா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக. .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

எனக்குத் தண்ணீர் வேண்டும். : .....

16. 'பதின்மூவாயிரத்து தொண்ணூற்று எட்டு' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

: .....

17.

2	6
0	4

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

: .....


18. பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 3, ஆயிரத்தினிடத்து இலக்கம் 5, நூறினிடத்து இலக்கம் 1, பத்தினிடம் இலக்கம் 4, ஒன்றினிடத்து இலக்கம் 7, ஆகவுள்ள எண் யாது?

: .....

19. 45 ரூபாய் வீதம் 3 வரைகோல்களையும் 98 ரூபாய் வீதம் 2 வர்ண பென்சிற் பெட்டிகளையும் வாங்கும்போது செலவாகும் பணம் எவ்வளவு?

: ரூபாய் .....

20. கீழே தரப்பட்டுள்ள சதுரத்தில் **நான்கு** சமச்சீர்க் கோடுகள் வரைக.



21. நான்கு பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பாடசாலை	கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை
காமினி வித்தியாலயம்	2670
பீற்றர் வித்தியாலயம்	4045
சரஸ்வதி வித்தியாலயம்	1273
மதீனா வித்தியாலயம்	1938


(i) காமினி வித்தியாலயத்திலும் பீற்றர் வித்தியாலயத்திலும் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

: .....

(ii) சரஸ்வதி வித்தியாலயத்தை விட மதீனா வித்தியாலயத்தில் எத்தனை மாணவர்கள் கூடுதலாகக் கற்கின்றனர்?

: .....

22.



இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கையை முழு உருவின் பின்னமாக எழுதுக.


: .....

[பக். 5 ஐப் பார்க்க

www.lkedu.lk

23. அண்ணனின் நிறை 46 kg 250 g ஆகும். தம்பியின் நிறை 32 kg 500 g ஆகும். அண்ணன் தம்பியிலும் பார்க்க எவ்வளவு நிறையால் கூடியவன்?

: ..... kg ..... g

24. 

உருவில் உள்ள உருளையில் இருக்கும்,

(i) முகங்களின் எண்ணிக்கை யாது? : .....

(ii) வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது? : .....

25. ஒரு சுற்றாடற் பாசறை முற்பகல் 9.30 இற்கு ஆரம்பமாகிப் பிற்பகல் 2.10 இற்கு முடிவடைந்தது. அது நடத்தப்பட்ட நேரம் எவ்வளவு?

: ..... மணித்தியாலம் ..... நிமிடம்

26. ஒரு கதிரை உறையைத் தைப்பதற்கு 2 மீற்றர் 25 சென்ரிமீற்றர் நீளமுள்ள துணி தேவையாகும். இவ்வாறான 5 கதிரைகளின் உறையைத் தைப்பதற்குத் தேவையான துணியின் நீளம் யாது?

: ..... m ..... cm


27. சம அளவு நீரைக் கொள்ளும் 3 வாளியில் நீர் நிரப்பப்பட்டுள்ளது. அவற்றில் உள்ள நீரை ஒரு வெற்றுத் தாங்கியில் ஊற்றிய பின்னர் அதில் உள்ள நீரின் மொத்த அளவு 15 லீற்றர் 120 மில்லிலீற்றர் ஆகும். ஒரு வாளியில் இருந்த நீரின் அளவு யாது?

: ..... l ..... ml

28. ஒரு புத்தகப் பொதியில் 7 புத்தகங்கள் உண்டு. இவ்வாறான 750 பொதிகளில் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

29. மாணவர் குழுவொன்றுக்கு மிகவும் விருப்பமான மலர்களின் வகைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) ஒக்கிட் மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை அலரி மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: .....

(ii) சமமான எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் மலர் வகைகள் எவை?

: .....

● **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'எனது உள்ளத்தை என்னால் அமைதிப்படுத்த முடியும். எனது உள்ளத்தின் அமைதியை ஏனையோர் உணரத்தக்க வகையில் நான் நடந்து கொள்வேன்." இந்த எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்தப் படிமுறைக்கு உரியது?

(1) திடசித்தம் (2) பிரார்த்தனை (3) உதிப்பு

31. பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்கு எது?

(1) பிராணிகளின் மல - சலம் தாவரங்களுக்குப் பசளையாதல்

(2) வித்துக்களைப் பரப்பி தாவரங்கள் பெருக்கமடைய உதவுதல்

(3) பிராணிகள் தாவரப் பகுதிகளை உண்ணுதல்

[பக். 6 ஐப் பார்க்க

www.ikeou.lk

32. பங்குனி மாதம் பூப்பூக்கும் தாவரங்கள் இரண்டு,

(1) வாகை, விளா (2) பாலை, வீரை (3) முருங்கை, வேம்பு

33. இலங்கை அரச இலச்சினையில் உள்ள சூரியனும் சந்திரனும் அடையாளப்படுத்துவது

(1) நிலைத்திருப்பு (2) சௌபாக்கியம் (3) தன்னிறைவு

34. உடன் உணவுகள், எண்ணெய் மற்றும் மீளகாய் அதிகம் அடங்கிய உணவுகளை உண்பதால் ஏற்படத்தக்க நோய் எது?

(1) நீரிழிவு (2) உயர் குருதியமுக்கம் (3) இரப்பையழற்சி

35. பனிக்கட்டிகள் சிலவற்றை ஒரு கண்ணாடிக் குவளையினுள் இட்டு, சிறிது நேரம் வெளியே வைத்திருந்த பின்னர் அதில் அவதானிக்க முடியாதது எது?

(1) குவளையில் உள்ள பனிக்கட்டிகளின் அளவு சிறியதாதல்

(2) குவளையிலிருந்து வளிக் குமிழிகள் வெளியேறல்

(3) குவளையின் வெளிப்புறம் ஈரமாக இருத்தல்

36. 'ஹீன்போவிட்டியா' என்பது

(1) இலங்கைக்கே உரித்தான தாவரங்களில் ஒன்று

(2) இலங்கைக்கே உரித்தான பிராணிகளில் ஒன்று

(3) இலங்கைக்கே உரித்தான மீனினங்களில் ஒன்று

37. இரண்டு சட்டக் காந்தங்களின் முனைவுகள் ஒன்றினுக்கொன்று கிட்டக் கொண்டு செல்லப்பட்டன. அப்போது இரண்டு காந்தங்களும் ஒன்றினையொன்று தள்ளுவதனைக் காணக்கூடியதாக இருந்தது. அதற்காக இரண்டு காந்தங்களும் கிட்ட வைக்கப்பட வேண்டிய சரியான விதத்தினைக் காட்டும் உரு எது?

(1) S N S N (2) N S N S (3) N S S N

38. படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது?



(1) அபாயகரமான ஏற்றம் முன்னால்

(2) பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால்

(3) பாதுகாப்புடைய புகையிரதக் கடவை முன்னால்

39. சுவர் மேற்பரப்பில் ஒட்டிக்கொள்ளக் கூடிய விசேட பாதங்களைக் கொண்ட பிராணி

(1) பல்லி (2) நத்தை (3) தவளை

40. எமது நாட்டு மண்ணின் செழுமையை நீக்கும் நோக்குடன் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் எரித்து அழிக்கப்பட்ட தாவர வகை எது?

(1) இலந்தை (2) தேக்கு (3) இலுப்பை

41. விளக்குமாறு ஒன்றைப் பயன்படுத்திய பின்னர் அதனை வைக்க வேண்டிய சரியான முறை எது?

(1) நிலத்தில் கிடையாகப் போட்டு வைத்தல்

(2) ஈர்க்குகள் மேல் நோக்கி இருக்குமாறு வைத்தல்

(3) ஈர்க்குகள் தரையைத் தொடுமாறு வைத்தல்

42. விற்றமின் A போசாக்குக் குறைபாட்டால் பிள்ளைகளில் ஏற்படும் தாக்கம் யாது?

(1) கண் பார்வை குறைவடைதல்

(2) காயங்கள் ஆறுவது தாமதமாதல்

(3) உடல் எடை குறைதல்


43. கரப்பந்தாட்ட அணி ஒன்றில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) ஐந்து (2) ஆறு (3) பதினொன்று


[பக். 7 ஐப் பார்க்க

www.ikedu.lk


44. உலர் கலங்களுடன் இணைக்கும் கம்பிகளில் ஆளிகளுடன் மின்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் மின்குமிழ் **ஒளிர்வதில்லை?**



(1)



(2)



(3)

45. ஒரு களக் கற்கையின்போது மாணவன் ஒருவன் அவதானித்த ஒரு வித்தின் வரிப்படம் அருகே தரப்பட்டுள்ளது. இவ்வித்து பரம்பலடைவது



(1) விலங்குகளின் மூலம் ஆகும்.

(2) வெடித்தல் மூலம் ஆகும்.

(3) காற்றின் மூலம் ஆகும்.

46. உணவு உண்ணும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கம் யாது?

(1) உணவை விழுங்குவதற்கு முன் அதனைப் போதிய அளவு மெல்லுதல்

(2) உணவை உண்ணும்போது மற்றையவர்களுடன் சிரித்துப் பேசுதல்

(3) உணவாக உட்கொள்ளாத மிளகாய், கொரக்கா போன்றவற்றைத் தரையில் போடுதல்

47. நடக்கும்போது நிலத்தில் முதலில் படும் பாதத்தின் பகுதி எது?

(1) விரல் (2) குதிகால் (3) உள்ளங்கால்

48. குன்றிமணி அல்லது மஞ்சாடி அல்லது புளியம் வித்துக்களையும் குழிகள் கொண்ட பலகையொன்றையும் பயன்படுத்தி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு எது?

(1) பல்லாங்குழி (2) சடுகுடு (3) தாயம்போடுதல்

49. மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் ஒரு வழிமுறை எது?

(1) மின்னல் தாக்கம் நிகழும்போது குளித்தல்

(2) உயர்ந்த மரங்களின் கீழே நிற்றல்

(3) இடி தாங்கி ஒன்றை அமைத்துக் கொள்ளல்

50. சிகிரியா எதற்குப் பிரசித்தி பெற்றது?

(1) சுவர் ஓவியங்களுக்கு

(2) சிற்ப வேலைப்பாடுகளுக்கு

(3) மரச் செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு

51. மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய கண்ணாடி என்பதை உணர்த்தும் குறியீடு எது?



(1)



(2)



(3)

52. துட்டகைமுனு மன்னனின் தந்தை யார்?

(1) தேவநம்பிய தீஸன் (2) காவன்திஸ்ஸ (3) எல்லாளன்

[பக். 8 ஐப் பார்க்க

www.lkedu.lk

53. தேசப்படமொன்றில் அதிவேகப் பாதை குறித்துக் காட்டப்படும் நியம நிறம் எது?

(1) சிவப்பு (2) கறுப்பு (3) ஊதா

54. அச்சு ஊடகத்தையும் இலத்திரனியல் ஊடகத்தையும் முறையே குறிப்பிடும் விடை எது?

(1) தொலைபேசியும் மின்னஞ்சலும்

(2) துண்டுப்பிரசுரமும் தொலைநகலும்

(3) நாளிதழும் துண்டுப்பிரசுரமும்

55. தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகள் இலங்கைக்கு எத்திசையில் காணப்படுகின்றன?

(1) கிழக்கே (2) வடக்கே (3) மேற்கே

56. முற்காலத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையில் பயிர்களின் பாதுகாப்புக்காகக் கையாண்ட பாரம்பரியமான உத்தி **அல்லாதது** எது?

(1) பயிர்களுக்குச் சாம்பல் இடல்

(2) நீர்ப் பிசாசு அமைத்தல்

(3) பூச்சிகொல்லி மருந்து விசிறுதல்

57. முலையூட்டிப் பிராணி ஒன்றினை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?

(1) தாவரப் பகுதிகளை மாத்திரம் உணவாக உட்கொள்ளல்

(2) தாய் பாலூட்டிக் குட்டிகளை வளர்த்தல்

(3) முட்டையிட்டுக் குஞ்சு பொறித்தல்

58. பின்வருவனவற்றுள் எது பாதுகாப்பான சந்தர்ப்பமாகும்?

(1) வெள்ளம் ஏற்பட்டுள்ளபோது வெள்ள நீரில் நீராடச் செல்லல்

(2) புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்

(3) பாதையின் வலது புறத்தின் வழியே நடந்து செல்லல்

59. கிழங்குப் பயிர் வகைக்குரிய மரவள்ளிக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய உணவு

(1) பலாக்காய் (2) பூசணிக்காய் (3) பயற்றங்காய்

60. "எனது பாடசாலையில் கொண்டாடப்பட்ட ஆசிரியர் தினம்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

***

www.lkedu.lk

[සියලු ම හිමිමේ ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



